1992 செப்டம்பர் 23]

நம்முடைய தங்கத் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் 1992-ஆவது ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றித் தருவார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 51, திருமதி கே.எம். கலைச்செல்வி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

51—

காட்பாடி-வி. கோட்டா சாலை.

*9954—திருமதி கே. எம். கலைச்செல்வி:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காட்பாடி—வி. கோட்டா சாலையை 1992-93 ஆம் நிதி ஆண்டிலேயே அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திட்டம் ஏதும் இல்லை.

திருமதி கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் இன்று தமிழகத்தில் ஒரு பொற்கால ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கின்ற இந்த வேளையில் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். கடந்த ஆண்டே இந்த கோரிக்கையை நான் அவரிடம் வைத்திருக்கிறேன். வருகின்ற நிதியாண்டிலாவது இந்தக்கோரிக்கையை ஏற்று நிச்சயம் அந்த நெடுஞ்சாலையை அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையினுடைய நீளம் ஏறக்குறைய 56 கிலோ மீட்டர். இதிலே 18 கிலோ மீட்டர் இருவழிச் சாலையாக இருக்கிறது. மீதம் இருக்கின்ற 38 கிலோ மீட்டர் ஒருவழிச் சாலையாக இருக்கிறது. இன்றைக்கு பல்வேறு சாலைகளை ஒருவழிச் சாலைகளை சீர்படுத்துகின்ற திட்டத்திலே இந்த அரசு முனைப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, இருவழிச் சாலையாக மாற்றுகின்ற

1992 செப்டம்பர் 23]

சாலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த ஒருவழிச் சாலைகளை இன்றைக்கும் தரம் உள்ள சாலைகளாக மாற்றியதற்குப் பின்னாலே இந்தச் சாலையை மேம்படுத்துகின்ற திட்டத்தை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண், 52, திருமதி என். கனகவல்லி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

52—

இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து தென்பகுதிக்கு கால்வாய் அமைத்தல்.

* 10018— திருமதி என். கனகவல்லி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 9156 ஏக்கர் பயன்படக்கூடிய 28.7 கோடியில் அனுமதிக்கப்பட்டுள்ள வைப்பாற்றின் குறுக்கே கட்டப்படவுள்ள இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து தென்பகுதிக்கு கால்வாய் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்கால்வாயினால் நம்பிபுரம் பகுதியிலுள்ள 1000 ஏக்கர் நிலமும் பயன்பெறும் வகையில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்தை நம்பி வானம் பார்த்த பூமியைக் கொண்ட மக்களின் நலனில் அக்கறை கொண்ட நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இல்லை என்று இல்லாமல் இருக்கன்குடி அணைக்கட்டிலிருந்து நம்பிபுரத்திற்கு 7 கிலோ மீட்டர் கால்வாய் அமைத்தால் கீழ்